# தமிழக ஆறுகள்



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்
www.worldtamilacademy.com


| வரிசை எண் | பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 1. | காவிரி ஆறு | 7 |
| 2. | பாலாறு | 13 |
| 3. | தென்பெண்ணை ஆறு | 18 |
| 4. | வைகை ஆறு | 24 |
| 5. | தாமிரபரணி ஆறு | 32 |



ஆறுகள் இயற்கையின் அற்புதமான படைப்புகளில் ஒன்றாகும். அவை மலைகள், பனிப்பாறைகள் அல்லது ஊற்றுகளில் இருந்து உருவாகி, நிலப்பரப்பின் ஊடாக வளைந்து நெளிந்து ஓடி, இறுதியில் கடல், ஏரி அல்லது மற்றொரு பெரிய ஆற்றில் கலக்கின்றன. ஆறுகள் வெறும் நீர்வழிகள் மட்டுமல்ல; அவை பல்லுயிர்ச்சூழலின் ஆதாரமாகவும், மனித நாகரிகத்தின் தொட்டிலாகவும் விளங்குகின்றன.



மழைப்பொழிவு, பனி உருகுதல் மற்றும் நிலத்தடி நீர் ஊற்றுகள் ஆகியவை ஆறுகளின் முக்கிய நீர் ஆதாரங்களாகும். மலைப்பாங்கான பகுதிகளில் அதிக மழை பெய்யும்போது அல்லது பனி உருகும்போது, நீர் நிலச்சரிவின் காரணமாக சிறிய ஓடைகளாக உருவாகி பின்னர் ஒன்று சேர்ந்து பெரிய ஆறுகளாகின்றன.




தமிழகம், பல்வேறுபட்ட நில அமைப்புகளையும் காலநிலையையும் கொண்ட ஒரு மாநிலமாகும்.




தமிழகத்தில் பாயும் ஆறுகள் விவசாயத்திற்கும் குடிநீருக்கும் முக்கிய ஆதாரமாக விளங்குகின்றன.







தமிழகத்தில் பாயும் ஆறுகள் மேற்குத் தொடர்ச்சி மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைகளில் உற்பத்தியாகி,வங்கக் கடலில் கலக்கின்றன.





தமிழ்நாட்டினை முக்கிய ஆறுகள், துணையாறுகள், கிளையாறுகள் என எண்பதுக்கும் மேற்பட்ட ஆறுகள் வளம்பெறச் செய்கின்றன. தமிழகத்தில் பல ஆறுகள் பாய்ந்தாலும், காவிரி, பாலாறு, தென்பெண்ணை, வைகை மற்றும் தாமிரபரணி ஆகியவை முக்கியத்துவம் வாய்ந்தவை. இவை ஒவ்வொன்றும் தமக்கே உரிய தனிச்சிறப்புகளையும், வரலாற்றையும் கொண்டுள்ளன.

# காவிரி ஆறு



தமிழகத்தின் மிக நீளமான மற்றும் முக்கியமான ஆறாகும். இது கர்நாடக மாநிலத்தின் குடகு மாவட்டத்திலுள்ள பிரம்மகிரி மலைப்பகுதியில் உள்ள தலைக்காவேரியில் உற்பத்தியாகிறது




கர்நாடகா மற்றும் தமிழ்நாடு மாநிலங்கள் வழியாக தென்கிழக்கு திசையில் சுமார் 800 கிலோமீட்டர் நீளம் வரை பாய்ந்து, தஞ்சாவூர் அருகே வங்கக்கடலில் கலக்கிறது



பவானி, நொய்யல், அமராவதி போன்ற பல துணை ஆறுகளும் காவிரியுடன் இணைந்து தமிழ்நாட்டிற்கு வளம் சேர்க்கின்றன. காவிரியில் பாயும் சராசரி நீரளவு வினாடிக்கு 23,908 கன அடி












தமிழகத்தில் தர்மபுரி, சேலம், ஈரோடு, நாமக்கல், கரூர், திருச்சி, தஞ்சாவூர், மயிலாடுதுறை போன்ற மாவட்டங்கள் காவிரியால் வளம் பெறுகின்றன










மேட்டூர் அணை, கல்லணை மற்றும் மேலணை ஆகியன காவிரி ஆற்றின் மீது கட்டப்பட்டுள்ள அணைகளாகும்

# ஒகேனக்கல் அருவி

MAP

VIDEO


கல்லணை உலகின் பழமையான, இன்றும் பயன்பாட்டில் உள்ள நீர்ப்பாசன அமைப்புகளுள் ஒன்றாகும். காவிரியின் நீர்ப்பிடிப்புப் பகுதி தமிழகத்தின் நெற்களஞ்சியமாக (bowl of Rice) விளங்குகிறது ஒகேனக்கல் அருவி காவிரிக்கு மேலும் அழகு சேர்க்கின்றன

# கல்லணை


VIDEO

MAP




பாலாறு
MAP
VIDEO


கர்நாடகாவின் கோலார் மாவட்டத்தில் உள்ள நந்தி துர்கா மலைகளில் உற்பத்தியாகி, ஆந்திரப்பிரதேசம் மற்றும் தமிழகம் வழியாகப் பாய்கிறது. இதன் மொத்த நீளம் 348 கிலோமீட்டர்கள் ஆகும். இதில் 222 கிலோமீட்டர் தமிழ்நாட்டின் வழியாக ஓடுகிறது




VIDEO

நந்தி துர்கா
மலை

MAP



கடல் மட்டத்திலிருந்து சுமார் 1,200 மீட்டர் உயரத்தில் உற்பத்தியாகிறது. பாலாறு பெரும்பாலும் மணல் நிறைந்த ஆறாக இருப்பதால், மேற்பரப்பு நீர் ஓட்டம் குறைவாக இருக்கும். ஆனால் இது நிலத்தடி நீர் ஆதாரங்களை செறிவூட்டுவதில் முக்கிய பங்கு வகிக்கிறது.




பாலாறு தமிழ்நாட்டின் வேலூர், விழுப்புரம், திருவண்ணாமலை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களுக்கு நீர்வளத்தை வழங்குகிறது. இந்த ஆற்றின் முக்கிய கிளை நதிகளாக மலட்டாறு, பொன்னையாறு, செய்யாறு ஆகியவை அமைகின்றன

பாலாற்றின் குறுக்கே பல அணைகளும் தடுப்பணைகளும் கட்டப்பட்டுள்ளன. குறிப்பாக **பாலாறு-பொருந்தலாறு அணை** மற்றும் **திருமூர்த்தி அணை** போன்றவை குறிப்பிடத்தக்கவை. இந்த அணைகள் விவசாயம் மற்றும் குடிநீர் தேவைகளை நிறைவு செய்கின்றன.



பாலாறு–பொருந்தலாறு



திருமூர்த்தி அணை




இறுதியாக பாலாறு சென்னைக்கு தெற்கே சுமார் 100 கி.மீ தொலைவில் உள்ள வயலூர் என்னுமிடத்தில் வங்காள விரிகுடாவில் கலக்கிறது

திருமூர்த்தி அணை

MAP

VIDEO

# தென்பெண்ணை ஆறு



பாலாற்றைப் போல தென்பெண்ணை அறும் கோலார் மாவட்டத்தில் உள்ள நந்தி துர்கா மலைகளில் உற்பத்தியாகி, கர்நாடகம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் 430 கிமீ தூரம் பாய்ந்து இறுதியில் தமிழ்நாட்டின் கடலூர் அருகே தாழங்குடா பகுதியில் வங்காள விரிகுடாவில் கலக்கிறது.






தென்பெண்ணையாற்றின் நீர்ப் பிடிப்புப் பகுதிகள் சுமார் 14,449 கி.மீ ஆகும். மார்கண்டாறு, பாம்பாறு, வன்னியாறு, கல்லாறு, கெடிலம் ஆறு இதன் முக்கிய துணையாறுகளாகும்.




தமிழகத்தில் கிருஷ்ணகிரி, தருமபுரி, திருவண்ணாமலை, வேலூர், விழுப்புரம், திருக்கோயிலூர் மற்றும் கடலூர் போன்ற மாவட்டங்களில் சுமார் 40,000 ஏக்கர் விளைநிலங்கள் தென்பெண்ணை ஆற்றின் நீரால் பாசனம் பெறுகின்றன.

மேலும், இந்த மாவட்டங்களில் உள்ள பல கிராமங்களுக்கும், நகரங்களுக்கும் இது குடிநீர் ஆதாரமாக உள்ளது. புதுச்சேரி மாநிலத்தின் சில பகுதிகளும் இந்த ஆற்றின் நீரால் பயன்பெறுகின்றன. ஆற்றின் கரையோர முக்கிய நகரங்கள் பெங்களூர், ஒசூர் ஆகும்.



தென்பெண்ணை ஆறு **பருவமழை சார்ந்த ஆறு** ஆகும். பெரும்பாலும் வறண்டே காணப்படும். தென்மேற்கு பருவமழையின் போது நீர்பிடிப்பு பகுதிகளில் நீர் பாய்வதாலும், வடகிழக்கு பருவமழையால் தமிழ்நாட்டில் நீர் பாய்வதாலும் நீர்வரத்து இருக்கும்.




சாத்தனூர் அணை, சாத்தனூர் பிக்-அப் அணை, திருக்கோயிலூர் அணை, எல்லீஸ் அணை, தளவானூர் தடுப்பணை, சொர்ணாவூர் அணை போன்றவை தென்பெண்ணை ஆற்றை தடுத்து தண்ணீரை சேமிக்கின்றன


சொர்ணாவூர் அணை


தளவானூர் தடுப்பணை


சாத்தனூர் அணை


எல்லீஸ் அணை


வைகை ஆறு
VIDEO
MAP


வைகை ஆறு மேற்குத் தொடர்ச்சி மலையில் உள்ள வருசநாடு மலைகளில் (Varusanadu Hills) உற்பத்தியாகிறது. குறிப்பாக, மேகமலைப் பகுதியில் இதன் ஊற்றுக்கண் அமைந்துள்ளது.




தென் மாவட்டங்களின் உயிர்நாடியாகவும், மதுரை மாநகரின் அடையாளச் சின்னமாகவும் விளங்கும் ஒரு பழம்பெரும் நதியாகும்.



வைகை ஆற்றின் நீளம் 258கி.மீ. பாசனப் பரப்பு 7031ச.கி.மீ. பொதுவாக மழைக்காலத்தில், குறிப்பாக வடகிழக்குப் பருவமழைக் காலங்களில் மட்டும் இவ்வாற்றில் நீர்ப்பெருக்கு ஏற்படும்.






சுருளியாறு, தேனியாறு, வட்டாறு, வராகநதி, மஞ்சளாறு, நாகலாறு, மருதநதி, சிறுமலையாறு, சாத்தையாறு முதலியவை வைகையின் துணை ஆறுகளாகும். மதுரை மாநகரின் நடுப்பகுதியைக் கடந்து செல்வது வைகை ஆற்றின் மிக முக்கியமான சிறப்பம்சமாகும்.




வைகை ஆறு மற்றும் அதன் துணை ஆறுகள் தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள விவசாய நிலங்களுக்குப் பாசன வசதியை வழங்குகின்றன. நெல், கரும்பு, வாழை போன்ற பயிர்கள் இதன் நீரால் செழித்து வளர்கின்றன. வைகை ஆறு இறுதியில் பாக் ஜலசந்தியில் (Palk Strait) கலக்கிறது



வைகை ஆறு நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. காவேரி போன்ற ஆறுகளைப் போலல்லாமல் **பருவமழை சார்ந்த ஆறாகும்.** மழைக்காலங்களில் நீர்வரத்து அதிகமாக இருக்கும், மற்ற காலங்களில் வறண்டு காணப்படும். எனினும் தென் தமிழகத்தின் ஒரு முக்கிய நீர் ஆதாரமாகவும், கலாச்சார அடையாளமாகவும் வைகை தொடர்ந்து விளங்குகிறது.


பெரியாறு அணை, வைகை அணை, சோத்துப்பாறை அணை, மஞ்சளாறு அணை, மருதநதி அணை, சாத்தையாறு அணை ஆகியவை இந்தப்படுகையில் உள்ள அணைகளாகும்.



**மீனாட்சி அம்மன் கோவில்** மற்றும் மதுரையின் பல வரலாற்று நிகழ்வுகள் வைகை ஆற்றங்கரையிலேயே நடைபெறுகின்றன. அழகர் ஆற்றில் இறங்கும் நிகழ்வு உலகப்புகழ்பெற்றது ஆகும். சங்க இலக்கியங்களில் வைகை ஆறு செழிப்பிற்கும், வளத்திற்கும் எடுத்துக்காட்டாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. வைகை ஆற்றில் நடைபெறும் **சித்திரைத் திருவிழா** ஒரு முக்கிய நிகழ்வாகும்.




# தாமிரபரணி ஆறு





தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களின் முக்கிய நீர் ஆதாரமாக விளங்குவது தாமிரபரணி ஆறாகும். ஆற்றின் கரைகளிலும், படுகையிலும் உள்ள தாமிரச் சத்து மணல் நீரில் கலந்து, நீருக்கு செம்பழுப்பு அல்லது தாமிர நிறத்தைக் கொடுக்கும். இந்த நிறத்தின் காரணமாகவே இந்த ஆறு "தாமிரபரணி" (தாமிரம் + வருணி = செம்பு நிற ஆறு) என்று பெயர் பெற்றது. தண்பொருநை எனவும் அழைக்கப்படுகிறது. இது தமிழ்நாட்டில் உற்பத்தியாகி, தமிழ்நாட்டிலேயே கடலில் கலக்கும் ஒரே வற்றாத நதி



# பொதிகை மலை

தாமிரபரணி ஆறு மேற்குத் தொடர்ச்சி மலையில் உள்ள **பொதிகை மலையின்** (அகத்தியமலை) கிழக்குச் சரிவில் உற்பத்தியாகிறது. மேற்குத் தொடர்ச்சி மலையில் உள்ள பல ஊற்றுகளாலும், அருவிகளாலும் ஆண்டு முழுவதும் நீர் பெறுகிறது. இதன் மொத்த நீளம் சுமார் 128 கி.மீ. ஆகும்.

மணிமுத்தாறு, கடனாநதி, பச்சையாறு, சிற்றாறு போன்றவை தாமிரபரணி ஆற்றின் சில முக்கிய துணை ஆறுகள் ஆகும். திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்கள் வழியாகப் பாய்ந்து, பழையகாயல் அருகே வங்காள விரிகுடாவில் கலக்கிறது.







தாமிரபரணி ஆற்றின் குறுக்கே பாபநாசம் அணை, மணிமுத்தாறு அணை, சேர்வலாறு அணை போன்ற பல அணைகள் கட்டப்பட்டுள்ளன. இவை நீர்ப்பாசனத்திற்கும், மின் உற்பத்திக்கும் உதவுகின்றன. நெல், வாழை, தென்னை போன்ற பயிர்கள் இதன் நீரால் செழித்து வளர்கின்றன.



தாமிரபரணி நதிக்கரையில் நடத்தப்பட்ட அகழாய்வுகள் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய தமிழர் நாகரிகத்தின் தடயங்களை வெளிப்படுத்தியுள்ளன. இதனால் இந்த ஆறு தமிழர்களின் நாகரிகம் மற்றும் கலாச்சாரத்துடன் நெருங்கிய தொடர்புடையது. மேலும் கொற்கை போன்ற பண்டைய துறைமுகங்களும் தாமிரபரணி ஆற்றின் கரையில் அமைந்திருந்தன.





தமிழகத்தின் ஆறுகள் குடிநீர், பாசனம், மின் உற்பத்தி, நிலத்தடி நீர் செறிவூட்டுதல், மீன்பிடித்தல், சுற்றுலாவை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு வழிகளில் மக்களுக்கு நன்மை பயக்கின்றன.



இருப்பினும், ஆற்று நீர் மாசடைதல், மணல் கொள்ளை, ஆக்கிரமிப்புகள், பருவமழை குறைபாடு மற்றும் ஆறுகளுக்கிடையே நீர் பங்கீடு போன்ற சவால்கள் இந்த ஆறுகளின் நீடித்த தன்மையை அச்சுறுத்துகின்றன.



தமிழகத்தின் ஆறுகள் வெறும் நீர்வழித்தடங்கள் அல்ல; அவை மாநிலத்தின் கலாச்சார, வரலாற்று மற்றும் பொருளாதார அடையாளம். எதிர்கால சந்ததியினருக்கு இந்த அரிய வளங்களை பாதுகாப்பது நமது கடமையாகும்.



ஆறுகளைப் பாதுகாக்கவும், புனரமைக்கவும், அவற்றின் நீரோட்டத்தை நிலைநிறுத்தவும் அரசு, பொதுமக்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் இணைந்து செயல்படுவது அத்தியாவசியம்.



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com